| | | |
|---|---|---|
| | கரூர்<br>மா.ஆ.நி. | **கரூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்**<br>**கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,**<br>**ஒருங்கிணைந்த கூட்டுறவு வளாகம்,**<br>**மாவட்ட காவல் அலுவலகம் பின்புறம்,**<br>**மாவட்டஆட்சித்தலைவர் அலுவலக வளாகம்,**<br>**கரூர் மாவட்டம் – 639 007.** |

**நாள் – 25.02.2021**

## முக்கிய அறிவிப்பு

கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், கரூர் அறிவிக்கை எண். 02 2020 நாள். 13.3.2020 மூலம் கரூர் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் காலியாக உள்ள உதவியாளர்/எழுத்தர்/மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு 06.12.2020 அன்று எழுத்து தேர்வும் 29.01.2021 அன்று நேர்முகத் தேர்வும் நடத்தப்பட்டதில், எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வில் பெற்ற மதிப்பெண் அடிப்படையிலும் வகுப்பு வாரியான இனச்சுழற்சி அடிப்படையிலும் விண்ணப்பதாரர்கள் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டுள்ளவர்கள் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. உரிய விபரங்களை உள்ளீடு செய்து தேர்வு முடிவினை தெரிந்துகொள்ளலாம்.

தேர்ச்சி பெற்றவர்களுக்கான தெரிவு செய்யப்பட்ட விவரம் குறித்து மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்தின் மூலம் தனியே அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும். தேர்ச்சி பெற்றவர்களுக்கான பணி நியமன ஆணை சம்மந்தப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் தெரிவர்கள் விண்ணப்பத்தில் வழங்கியுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பப்படும்.

இத்தெரிவு குறித்து, மாண்பமை உயர்நீதிமன்றம் சென்னை மற்றும் மதுரை கிளையில் வழக்குகள் ஏதேனும் தொடரப்பட்டு நிலுவையிருப்பின் அவ்வழக்குகள் தொடர்பாக வழங்கப்படும் நீதிமன்ற ஆணையின் முடிவுக்குட்பட்டது என்ற நிபந்தனையின் அடிப்படையில் இத்தற்காலிகத் தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகிறது.

தலைவர் / இணைப்பதிவாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட ஆள்சேர்ப்பு
நிலையம், கரூர்

**CLICK HERE TO VIEW RESULT**